பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

26 09 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சிறு, குறு விவசாயிகள் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தொலைத் தொடர்பு உபகரணங்களின் உள்நாட்டு உற்பத்திக்கு அரசு ஊக்கம் அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் அனைவருக்கும் உயர்தர கல்வி வழங்க வேண்டும் என்ற இலக்குடன் மாநில அரசு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. கல்வி வளர்ச்சியில் மாநில அரசு கவனம் செலுத்தவில்லை என்று அஇஅதிமுக மற்றும் பிஜேபி குற்றம் சாட்டியுள்ளன.

5. 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சிறு, குறு விவசாயிகள் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெறும் உலக உணவு இந்தியா மாநாடு மற்றும் கண்காட்சியில் பேசிய அவர், உலகளாவிய உணவுப் பாதுகாப்பில் இந்தியா தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருவதாக கூறினார்.

நாட்டில் கூட்டுறவுத்துறை, ஊரகப் பொருளாதார வளர்ச்சிக்கும், வேளாண் மற்றும் பால்வள மேம்பாட்டுக்கும் முக்கிய பங்காற்றுவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள விவசாயிகளில் 85 சதவீதம் பேர் சிறு, குறு விவசாயிகள்தான் என்று கூறிய பிரதமர், அவர்களின் நலனுக்காக மத்திய அரசு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்து செயல்படுவதாக கூறினார்.

நாடு முழுவதும் புதிதாக 10 ஆயிரம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இவை உணவுப் பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதலில் முக்கிய பங்காற்றி வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

தொலைத் தொடர்பு உபகரணங்களின் உள்நாட்டு உற்பத்திக்கு அரசு ஊக்கம் அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற தொலைதொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் உபகரண உற்பத்தியாளர்களுடனான ஆலோசனை கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்தார்.

தரநிலைகள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அரசின் எதிர்கால திட்டங்கள் தொலைதொடர்புத் துறையில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்றும் என்று திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் அனைவருக்கு உயர்தர கல்வி வழங்க வேண்டும் என்ற இலக்குடன் மாநில அரசு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அரசின் திட்டங்களால் மாநிலத்தில் கல்வி வளர்ச்சி அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

(Voice Byte - Stalin - 40 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் கல்வி வளர்ச்சி தொடர்பாக திமுக அரசு தவறான தகவல்களை கூறி வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

வேடசந்தூர் மற்றும் கரூரில் நேற்றிரவு அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைந்துள்ளதாகவும், அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவித்தார்.

பள்ளி மாணவர்களிடையே நடைபெறும் மோதல்களைத் தடுக்க மாநில அரசு தவறிவிட்டதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் கல்வி அமைப்பை மாநில அரசு சிதைத்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 4 ஆயிரம் உதவி பேராசிரியர் பணியிடங்களை நிரப்பாமல் மாநில அரசு காலம் தாழ்த்துவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

அரசுக் கல்லூரிகளில் போதிய அடிப்படை வசதிகள் இல்லை என்றும், மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசத்தை நீட்டித்த பின்னரும் கூட அரசுக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது திமுக அரசின் நிர்வாக தோல்வியை எடுத்துக்காட்டுவதாக திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<>>>>

இனி, மக்களின் மனதை வென்ற மத்திய அரசின் திட்டங்கள்...

(Opening Tune - 7 Sec)

சேவை, நல்லாட்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஓய்வின்றி பணியாற்றி வரும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, சிறந்த

நிர்வாகத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

இதுகுறித்த சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது இணையதள சேவை.

-----------------

(VO)

*பாரத் நெட் திட்டத்தின்மூலம், இணையதள சேவை நாட்டின் அனைத்துப்பகுதிகளுக்கும் சென்றடைந்துள்ளது.*

*இதன் காரணமாக, நாடு முழுவதும் இரண்டு லட்சத்து 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகளுக்கு இந்த வசதி கிடைத்துள்ளது.*

*இதற்காக, 7 லட்சம் கிலோமீட்டர் தொலைவிற்கு கண்ணாடி இழை கேபிள் பதிக்கப்பட்டுள்ளது.*

*மின்னணு நிர்வாகம், கல்வி, சிறு-குறு தொழில் வளர்ச்சி போன்றவற்றை தொலைதூர கிராமங்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் இணையதள சேவை முக்கிய பங்கு வகிக்கிறது.*

*பீகாரில் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் கண்ணாடி இழை இணையதள சேவை திட்டத்தை தொடங்கிவைத்து பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றினார்.*

*இணையதளத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை நகரங்களைவிட கிராமங்களில் அதிகரித்துள்ளதற்கு மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்று கூறினார்.*

*(Sound Byte – Modi – Sec. )*

*பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக உலகில் குறைந்த செலவில் இணையதளம் மற்றும் மொபைல் சேவைகளை வழங்கும் நாடாக இந்தியா திகழ்கிறது.*

*2014-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதற்கான கட்டணங்கள் தற்போது 97 சதவீதம் குறைந்துள்ளது.*

*ஐந்து-ஜி சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக பொதுமக்கள் மருத்துவ ஆலோசனைகளையும், விவசாயிகள் இயற்கை பேரிடர்கள் குறித்த*

*முன்னெச்சரிக்கை தகவல்களையும் அதி விரைவாக பெற்று வருகின்றனர் என்றால் மிகையல்ல.*

*அதி விரைவு இணையதள சேவை நாட்டில் உள்ள அனைத்து குடியிருப்புகளையும் எட்டியுள்ளதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைநோக்கு பார்வையுடன் செயல்படுத்திய திட்டங்களே காரணமாகும்.*

*(Closing Signature Tune).*

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஐநா அறிவித்த அமைதித் திட்டத்தை செயல்படுத்த, அமெரிக்காவுடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளதாக பாலஸ்தீன அதிபர் திரு மஹ்மூத் அப்பாஸ் கூறியுள்ளார்.

------------

உத்தரப் பிரதேசத்தின் பிருந்தாவன் மற்றும் மதுராவில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நேற்று வழிபாடு மேற்கொண்டார்.

------------

மேற்கு வங்க மாநிலத்தில் துர்கா பூஜை கொண்டாட்டங்களில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று பங்கேற்கிறார்.

------------

நிலக்கரி வாயுவாக்கம் தொடர்பான விளக்க கூட்டம் புதுதில்லியில் மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

------------

பாதுகாப்பான டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகள் குறித்த புதிய வழிகாட்டு நெறிமுறைகள் ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

------------

சென்னையில் தேசிய கடல்சார் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் தலைமை விருந்தினராகப் பங்கேற்கிறார்.

------------

தேனி மாவட்டம் சுருளி அருவியில் சாரல் திருவிழா, நாளை தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு ரஞ்சித் சிங் தெரிவித்துள்ளார்.

------------

கிருஷ்ணகிரியில் நாளை நடைபெறவுள்ள விரைவு மிதிவண்டி போட்டியில் பங்கேற்க விரும்புவோர் இன்று பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் திரு தினேஷ்குமார் கூறியுள்ளார்.

------------

காஞ்சிபுரத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச் செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

------------

சென்னை நந்தம்பாக்கத்தில் நாளையும் நாளை மறுநாளும் நடைபெறவுள்ள வேளாண் வணிகத் திருவிழாவில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பங்கேற்றுப் பயன் அடையுமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

------------

சென்னையில் இதுவரை 53 ஆயிரம் தெருநாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

------------

*விளையாட்டுச் செய்தி*

17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் நேபாளத்தை வென்றது.

நாளை நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்தியா - பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

<<<<The End>>>>